# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2109/25 - 2019 පෙබරවාරි මස 08 වැනි සිකුරාදා - 2019.02.08

*2109/25 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தினாற் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில், நவதுன் கோரளையில் பல்லே பத்துவையில், கங்குல்விட்டிய கிராம அலுவலர் பிரிவில் (183C) கங்குல்விட்டிய கிராமத்தில் அமைந்துள்ள 9.1057 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய ரம்புக்கந்தவத்த, கங்குல்விட்டிய வத்த, தவட்டகஹதெனிய ஹேன என்னும் காணி.

01. **துண்டு இல. 108 - உரிமை கோருவோர் : அரசு, (காணி எடுத்தல் கட்டளைச் சட்டத்தின் 38(அ) துணைக் கட்டளையின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது; ஆரம்ப உரிமை கோருவோர் : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 6.6163 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இல. 19, பாதை (பிரதேச சபை), துண்டு இல. 73 மற்றும் 18; கிழக்கு: துண்டு இல. 19 மற்றும் கங்குல்விட்டிய நீர் அருவி; தெற்கு: துண்டு இல. 19 மற்றும் கங்குல்விட்டிய நீர் அருவி; மேற்கு: துண்டு இல. 19 மற்றும் பாதை (பிரதேச சபை).

02. **துண்டு இல. 109 - உரிமை கோருவோர் : அரசு, (காணி எடுத்தல் கட்டளைச் சட்டத்தின் 38(அ) துணைக் கட்டளையின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது; ஆரம்ப உரிமை கோருவோர் : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 2.4894 ஹெக்டயார்.**

வடக்கு: நீர் அருவி, பாதை (பிரதேச சபை), துண்டு இல. 56 மற்றும் துண்டு இல. 74; கிழக்கு: பாதை (பிரதேச சபை) மற்றும் துண்டு இல. 56; தெற்கு: பாதை (பிரதேச சபை) மற்றும் துண்டு இல. 50; மேற்கு: துண்டு இல. 50 மற்றும் நீர் அருவி.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மே மாதம் 02ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு எலபாத்த பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத்தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும் 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். ஏ. தில்ருக்,
பிரதேச செயலாளர்,
எலபாத்த.

பிரதேச செயலகம்,
எலபாத்த,
2019, சனவரி 31.

02 - 824


1A - G 29421 - 17 (2019/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*